கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 17.05.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் உயிரி தொழில்நுட்ப மையத்தில் மாடித் தோட்டத்தில் வெட்டிவர் சாகுபடி குறித்த ஒருநாள் பயிற்சி நடைபெற்றது**

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையத்தில் "**மாடி தோட்டத்தில் வெட்டிவேர் சாகுபடி**" என்ற தலைப்பில் மே 17, 2025 அன்று பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் 50க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள் மற்றும் விவசாய பெருமக்கள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

இந்நிகழ்ச்சியின் துவக்கவிழாவில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர உயிரிதொழில்நுட்பத் துறை உதவி பேராசிரியர் முனைவர். வே. ராஜன் பாபு அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர உயிரிதொழில்நுட்பத் துறை தலைவர், முனைவர். ஈ. கோகிலாதேவி அவர்கள் தனது துவக்க உரையில், உயிரிதொழில்நுட்ப மகத்துவ மையத்தின் சிறப்புகள், நோக்கங்கள் மற்றும் அதன் செயல்பாடுகளை பற்றி எடுத்துரைத்தார். வெட்டிவேர் மண் அரிப்பின் இழப்பைத் தடுப்பதன் மூலம் அத்தியாவசிய மண் ஊட்டச்சத்துக்களைத் தக்கவைக்க உதவுகிறது. மேலும், வெட்டிவேர் வளர்ப்பு மண் மற்றும் தண்ணீரை சுத்திகரிக்க உதவுகிறது என்றும் கூறினார்.

கோயம்புத்தூர், எக்கோ கீரீன் யூனிட் திட்ட இயக்குநர் திரு.எஸ்.கே.பாபு அவர்கள் தனது பயிற்சி வகுப்பில் வெட்டிவேரின் நன்மைகள் மற்றும் விவசாயிகளின் நலனுக்கான சாகுபடி முறைகள் குறித்து விரிவாக விளக்கினார். மேலும் பிரித்தெடுக்கப்பட்ட எண்ணெய் வாசனை திரவியங்கள், சோப்புகள் மற்றும் நறுமண சிகிச்சையில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. அதன் ஆழமான வேர் அமைப்பு மண் அரிப்பைத் தடுக்க உதவுகிறது. மேலும், வெட்டிவேரின் இலை மற்றும் வேர் பயோமாஸிலிருந்து கரிமப் பொருட்களின் குவிப்பு, மண் நுண்ணுயிரிகள் மற்றும் தாவரங்களுக்கு வாழ்விடத்தை வழங்குகிறது, இது ஊட்டச்சத்து சுழற்சி மற்றும்

கிடைக்கும் தன்மையில் முக்கிய பங்கு வகிக்கிறது. வெட்டிவேர் ஒரு உயிரியல் பூச்சி கட்டுப்பாட்டு முகவராக செயல்படுவது கண்டறியப்பட்டுள்ளது. வெட்டிவேர் சாகுபடியை விவசாய நடைமுறைகளில் ஒருங்கிணைப்பதன் மூலம், விவசாயிகள் நீண்டகால நிலைத்தன்மை, மேம்பட்ட மண் ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் சவால்களுக்கு எதிராக அதிகரித்த பின்னடைவு ஆகியவற்றை கடந்து சாதிக்க முடியும் என்று கூறினார்.

வெட்டிவேர் சாகுபடி பயிற்சி, அதனை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் குழாய்களின் வகை, ஏற்றுமதி, மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், சாகுபடி சிரமங்கள், வேர் எடையைக் கண்காணித்தல், பொருளை விற்பனை செய்யும் செயல்முறை, உரம் பெறுதல் மற்றும் ஏழு மாத முதிர்வு காலத்திற்கு முன் வருமானம் ஈட்டுவதற்கான சாத்தியக்கூறுகள், வெட்டிவேர் சாகுபடி செய்தபின் காத்திருப்பு காலத்தில் வருமானம் ஈட்ட பிற பயிர்களை சாகுபடி செய்வதன் மூலம் வருமானத்தை ஈடு செய்தல், இந்த சாகுபடி அமைப்பிற்குள் ஏதேனும் குறுகிய கால சாகுபடி வாய்ப்புகள் உள்ளிட்ட வெட்டிவேர் சாகுபடியின் பல்வேறு அம்சங்கள் குறித்து தொழில்முனைவோர்களுடன் கலந்துரையாடினர்.

இறுதியாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர உயிர் தொழில்நுட்பவியல் துறை இ–யுவா ஒருங்கிணைப்பாளர் திருமதி. தி. பிருந்தா அவர்கள் நன்றிரையாற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**